ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# இயல்சாற்று

ஸ்ரீ மணவாளமாமுனிகள் நியமித்தருளினது

நன்றுந் திருவுடையோம்* நானிலத்தில் எவ்வுயிர்க்கும்*
ஒன்றும் குறையில்லை ஓதினோம் *— குன்றம்
எடுத்தானடி சேரி* ராமானுசன் தாள் *
பிடித்தார் பிடித்தாரைப் பற்றி*

வாழி திருக்குருகூர்*வாழி திருமழிசை*
வாழி திருமல்லி வளநாடு*— வாழி
சுழிபொறித்த நீர்ப்*பொன்னித் தென்னரங்கன் தன்னை*
வழிபறித்த வாளன் வலி.

திருநாடு வாழி* திருப்பொருநல் வாழி*
திருநாட்டுத் தென்குருகூர் வாழி *— திருநாட்டுச்
சிட்டத்தமர்வாழி * வாழி சடகோபன்*
இட்டத் தமிழ்ப்பாவிசை.

மங்கைநகர்வாழி* வண்குறையலூர்வாழி*
செங்கையருள்மாரி சீர்வாழி *— பொங்குபுனல்
மண்ணித் துறைவாழி* — வாழிபரகாலன்*
எண்ணில் தமிழ்ப்பாவிசை.

வாழியரோ தென்குருகை* வாழியரோ தென்புதுவை*
வாழியரோ தென்குறையல் மாநகரம் *— வாழியரோ
தக்கோர்ப்பரவும்* தடஞ்சூழ் பெரும்பூதூர்*
முக்கோல் பிடித்தமுனி.

மொழியைக் கடக்கும் பெரும் புகழான்,* வஞ்ச முக்குறும்பாம்—
குழியைக் கடக்கும்* நம் கூரத்தாழ்வான் சரண் கூடியபின்*
பழியைக் கடத்தும் இராமானுசன் புகழ் பாடி* அல்லா—
வழியைக் கடத்தல்* எனக்கு இனி யாதும் வருத்தமன்றே. (2) 7

நெஞ்சத்திருந்து* நிரந்தரமாக நிரயத்துய்க்கும்*
வஞ்சக்குறும்பின்* வகையறுத்தேன்* — மாயவாதியர்தாம்*
அஞ்சப்பிறந்தவன்* ஸ்ரீ மாதவனடிக்கு அன்புசெய்யும்
தஞ்சத்தொருவன்* சரணாம்புயமென் தலைக்கணிந்தே.

ஊழிதொறும் ஊழிதொறும் உலகமுய்ய*
உம்பர்களும் கேட்டுய்ய* — அன்பினாலே
வாழியெனும் பூதம் பேய் பொய்கை மாறன்
மழிசையர்க்கோன்* பட்டர்பிரான் மங்கைவேந்தன்
கோழியர்க்கோன் தொண்டர்துகள் *பாணன் கோதை
குலமுனிவன்* கூறிய நூலோதி — வீதி—
வாழியென வரும்திரளை* வாழ்த்துவார்தம்
மலரடி* என் சென்னிக்கு மலர்ந்தபூவே.

இயல்சாற்று சம்பூர்ணம்